सत्यमेव जयते

புதுச்சேரி அரசு




மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

# டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள்



## புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

**9 மார்ச், 2023**

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

டாக்டர் **தமிழிசை சௌந்தரராஜன்** அவர்கள்

புதுச்சேரி சட்டப்பேரவையில்

ஆற்றிய உரை

எண்ணுங் காரியங்கள் எல்லாம் - வெற்றி
ஏறப் புரிந்தருளல் வேண்டும் - தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும் - அதில்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும்.

என்ற நம் தேசியக்கவி பாரதியாரின் வெற்றி வரிகளோடு என் உரையை தொடங்குகிறேன்.

***மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே! மற்றும் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களே!***

**ப**தினைந்தாவது சட்டப்பேரவையின் நான்காவது கூட்டத்தொடரின் ஆரம்ப நாளான இன்று உங்களுடன் இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைவதுடன் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**2.** **“எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்.
என்றுரைத்தான் கண்ண பெருமான்
எல்லோரும் அமர நிலை யெய்தும் நன் முறையை
இந்திய உலகிற்கு அளிக்கும் – ஆம்
இந்திய உலகிற்கு அளிக்கும் – ஆம் ஆம்
இந்தியா உலகிற்களிக்கும் – வாழ்க”**

என்ற பாரதியாரின் கூற்றிற்கேற்ப..... ஜி20 மாநாட்டை நடத்தி சர்வதேச பொருளாதாரம், நிதி நிலைத்தன்மை, பருவநிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவை தொடர்புடைய பெரும் சவால்களை தீர்ப்பதற்காக – உலகிற்கே இந்தத் துறைகள் வழிகாட்ட நம் பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோதி அவர்கள் தொடர்ந்து செயலாற்றி வருவது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது... ஆக சர்வதேச பொருளாதாரத்தின் நிலையான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை பாதுகாக்கும் நோக்கத்துடன் ஜி20 உச்சி மாநாட்டின் தலைமைப் பொறுப்பை இந்தியா டிசம்பர் 2022 முதல் ஓராண்டிற்கு ஏற்று சுமார் 200 கூட்டங்கள் நாடு முழுவதும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதில் ஒன்று புதுச்சேரியில் 2023 சனவரி 30 மற்றும் 31–ல் நடைபெற்றது நம் துணைநிலை மாநிலத்திற்கு கிடைத்த பெருமை என்பதை பதிவு செய்கிறேன்.

**3.** சிறுதானியங்களை உட்கொள்ளுதல், உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மாண்புமிகு பாரதப் பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க 2023ஆம் ஆண்டை சிறுதானியங்களுக்கான ஆண்டாக ஐக்கிய நாடுகள் அறிவித்துள்ளன. மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்தபடி சிறுதானியங்களை பிரபலப்படுத்தி முன்னணியில் இருப்பதில் இந்தியா பெருமைகொள்கிறது. சிறுதானியங்களை உட்கொள்ளுதலால் விவசாயிகளின் நலன், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து அதிகரிக்கிறது.

**4.** பாரதப் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் ஆணைப்படி போட்டித்தன்மைக்கான நிறுவனம் மூலம் நடத்தப்பட்ட ஆய்வில் தரவரிசைக்கு பயன்படுத்தப்பட்ட குறியீட்டின் அடிப்படையில் குடிநீர் மற்றும் சுகாதாரம், தங்குமிடம், தனிப்பட்ட பாதுகாப்பு, தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் விருப்பம் போன்ற கூறுகளை உள்ளடக்கிய சமூக முன்னேற்றக் குறியீட்டில் 65.99 விழுக்காடு பெற்று இவ்வாட்சிப்பரப்பானது மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கிடையில் முதல் தரவரிசையை பெற்றுள்ளது என்பதில் பெருமைக்கொள்வதுடன், சிறந்த நாட்டுநலப்பணித் திட்ட குழுவிற்கான மற்றும் சிறந்த நாட்டு நலப்பணித் திட்ட அதிகாரி பிரிவிற்கான தேசிய விருதை இவ்வாட்சிப்பரப்பு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறது என்பதை இந்த மேன்மைமிகு அவையில் அறிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**5.** நிதி மேலாண்மையைப் பொறுத்த வரையில், இந்த அரசு 2022-23ஆம் ஆண்டில் நிதி விவகாரங்களைத் திறம்படக் கையாண்டுள்ளது. மத்திய அரசின் கூடுதல் நிதி உதவியாக ₹ 1,400 கோடி கிடைக்கப் பெற்றதன் காரணமாக 2022-23ஆம் நிதி ஆண்டில் மொத்த செலவினங்களுக்காக ₹ 11,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.** மாநிலத்தின் பொருளாதார நிலையை நிர்ணயம் செய்திட மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரு முக்கிய குறியீடாக உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

இவ்வாட்சிப்பரப்பின் 2022-23ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியாக ₹ 39,019 கோடி (நடப்பு விலை) என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2021-22ஆம் ஆண்டைவிட 4.09 விழுக்காடு கூடுதலாகும். புதுச்சேரியின் தனிநபர் வருமானம் 2021-22ஆம் ஆண்டில் ₹ 2,14,913லிருந்து (நடப்பு விலை) 2022-23ஆம் ஆண்டில் ₹ 2,22,451 ஆக (நடப்பு விலை) உயர்ந்துள்ளது. இது 3.51 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டுகிறது.

**7.** இந்த நல்ல செய்திகளுடன் 2022-23ஆம் நிதி ஆண்டில் இந்த அரசினுடைய பல்வேறு துறை சாதனைகளை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்பொழுது எடுத்துக்கூற நான் விரும்புகிறேன்.

## வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்

**8.** **“வயிற்றுக்கு சோறுண்டு கண்டீர் – இங்கு**
**வாழும் மனிதரெல் லோர்க்கும் – பயிற்று**
**உழுதுண்டு வாழ்வீர்”**

என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப கிராமப்புற பொருளாதாரத்தின் நிலையான வளர்ச்சியில் உதவுவதிலும் மற்றும் உணவுப் பாதுகாப்பிலும் வேளாண் முக்கிய பங்காற்றுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவ்வாட்சிப்பரப்பில் வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மானிய விலையில் வேளாண் இடுப்பொருட்கள் வழங்குதல், விவசாயிகளுக்கு பயிற்சிகள் மற்றும் களப்பார்வை வாயிலாக வேளாண் தொழில்நுட்ப அறிவை அளித்தல்

போன்றவற்றை பல்வேறு திட்டங்கள் வாயிலாக இந்த அரசு செயல்படுத்தி குறிப்பாக கிராமப் பகுதிகளை பொருளாதாரத்தில் மேம்படுத்தி வருகிறது.

**9.** மின்னணு-தேசிய வேளாண் சந்தை (e-NAM) திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக புதுச்சேரி விற்பனை குழுவிற்கு பாரதப் பிரதமரின் பொது நிர்வாகம் 2019ஆம் ஆண்டிற்கான விருது வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் 2021-22 வடகிழக்கு பருவ மழையினால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக நிவாரணத் தொகையான ₹ 7.10 கோடி நெல் சாகுபடி செய்த 7,036 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2022-23ஆம் ஆண்டில் புதுச்சேரி பகுதியில் கரும்பு மற்றும் பப்பாளி சாகுபடி செய்த 871 விவசாயிகளுக்கு நிவாரணமாக ₹ 93.24 இலட்சமும் மேலும், காரைக்கால் பகுதியில் நெல் சாகுபடி செய்த 4,842 விவசாயிகளுக்கு நிவாரணமாக ₹ 2.30 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. பாரதப் பிரதமரின் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், விவசாய நிலம் உள்ள விவசாயக் குடும்பத்திற்கு நிதி உதவியாக ₹ 13.06 கோடி வழங்கப்பட்டு 10,955 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**10.** புதுச்சேரி பகுதியில் 2022-23ஆம் ஆண்டில் நெல் சாகுபடி செய்த 1,097 பொது விவசாயிகளுக்கு சொர்ணவாரி 2021-22 பருவத்திற்கு ₹ 91.25 இலட்சமும் மற்றும் நெல் சாகுபடி

செய்த 1,614 பொது விவசாயிகளுக்கு நவரை 2021-22 பருவத்திற்கு ₹ 1.39 கோடியும் உற்பத்தி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், நெல் சாகுபடி செய்த 5,313 பொது விவசாயிகளுக்கு சம்பா 2021-22 பருவத்திற்கு ₹ 4.45 கோடியும் மற்றும் மணிலா, பயறு வகைகள், சிறுதானியங்கள், எள் மற்றும் பருத்தி பயிர்களை உற்பத்தி செய்த 1,964 விவசாயிகளுக்கு ₹ 73.36 இலட்சமும் உற்பத்தி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**11.** காரைக்கால் பகுதியில் குறுவை பருவத்தில் நெல் சாகுபடி செய்த 738 பொது விவசாயிகளுக்கும் மற்றும் 95 அட்டவணை இன விவசாயிகளுக்கும் முறையே ₹ 75.46 இலட்சமும் மற்றும் ₹ 8.60 இலட்சமும் உற்பத்தி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. சம்பா, தாளடி, நவரை பருவத்தில் நெல்லுக்கும், பயறு வகைகள், எள் மற்றும் பருத்தி பயிர்களுக்கும் மொத்த உற்பத்தி மானியம் பொது விவசாயிகளுக்கு ₹ 5.61 கோடியும் மற்றும் அட்டவணை இன விவசாயிகளுக்கு ₹ 65.50 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. கரும்பு சாகுபடி செய்த 831 விவசாயிகளுக்கு ₹ 1.88 கோடியும் மற்றும் சம்பா 2021-22 பருவத்தில் விதை நெல் உற்பத்தி செய்த 26 விவசாயிகளுக்கு ₹ 6.23 இலட்சமும் உற்பத்தி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**12.** பிரதம மந்திரி “ஃபசல் பீமா யோஜனா” (பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்) என்னும் திட்டத்தின்கீழ், கடந்த 2020-21ஆம் ஆண்டு நிவார் / புரவி புயல் பாதிப்பினால் ஏற்பட்ட பயிர் சேதம்

மற்றும் மகசூல் இழப்பீட்டுக்குள்ளான புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிக்குட்பட்ட 9,137 விவசாயிகளுக்கு ₹ 13.77 கோடி காப்பீட்டுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்த 524 மற்றும் 21 விவசாயிகள் பயனடையும் வகையில் அறுவடைக்கு பிந்தைய மானியமாக ₹ 36.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், வீடுகளில் தோட்டக்கலை பயிர்கள் வளர்ப்பதை ஊக்கப்படுத்தும் விதமாக மாடித் தோட்டங்கள் அமைத்திட ₹ 22.50 இலட்சமும் மற்றும் ₹ 3,000-ம் மதிப்புள்ள தோட்டக்கலை பைகள் 75 விழுக்காடு மானியத்தில் 1,000 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, 2,000 இலவச காய்கறி விதைகள் அடங்கிய சிறு பைகளும் ₹ 4.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**13.** தென்னை வளர்ச்சி வாரியத் திட்டத்தின்கீழ், 197 விவசாயிகளுக்கு மாதிரி திடல் அமைத்திட நிதி உதவியாக ₹ 16.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தென்னை சாகுபடி செய்திட 1,086 விவசாயிகளுக்கு உற்பத்தி மானியமாக ₹ 28 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் காளான் உற்பத்தி மையங்கள் அமைத்திட 12 பயனாளிகளுக்கு நிதி உதவியாக ₹ 47.69 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பளவை அதிகரித்திட 140 ஹெக்டேருக்கு அறுவடைக்கு பிந்தைய மானியமாக 420 விவசாயிகளுக்கு ₹ 20.51 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**14.** வேளாண் இயந்திரமயமாக்கல் துணைத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு 48 டிராக்டர்கள், 18 பவர் டில்லர்கள், ஒரு நடவு இயந்திரம், 3 ரோடோவேட்டர்கள், 4 பவர் வீடர்கள் மற்றும் ஒரு வைக்கோல் கட்டும் இயந்திரம் வாங்க மானியமாக ₹ 1.08 கோடி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், காரைக்கால் பகுதியில் 6 டிராக்டர்கள், 21 பவர் டில்லர்கள், ஒரு நடவு இயந்திரம், ஒரு பவர் வீடர், ஒரு சிறு கலப்பை இயந்திரம் மற்றும் 3 வைக்கோல் கட்டும் இயந்திரங்கள் வாங்க மானியமாக ₹ 50 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் 2023 பிப்ரவரி 10 முதல் 12 வரை "வேளாண் விழா 2023 மற்றும் 33வது மலர், காய் மற்றும் கனிக் கண்காட்சி" வெகு சிறப்பாக நடைபெற்றது.

## கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்

**15.** **"பாலைப் பொழிந்துதரும் பாப்பா – அந்த**
**பசு மிக நல்லதடி பாப்பா......**
**நெல்லு வயலில் உழுது வரும் மாடு**
**அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு – இவை**
**ஆதரிக்க வேணுமடி பாப்பா"**

என்ற நம் பாரதியின் கூற்றுப்படி கால்நடைகள் விவசாயிகளின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. கால்நடைகளைப் பாதுகாக்க இந்த அரசு கால்நடை வளர்ப்பில் அதிக முக்கியத்துவம்

அளித்து வருவது மட்டுமின்றி குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும், உணவு உற்பத்தியை அதிகரிப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

**16.** இந்த அரசு, கால்நடை சேவைகள் அனைத்தையும் கால்நடை மருத்துவ மையங்களின் மூலம் இலவசமாக வழங்கி வருகிறது. 2022-23ஆம் ஆண்டில் கால்நடை நலம் மற்றும் நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின்கீழ், ₹ 16 இலட்சம் மதிப்பில் நடமாடும் கால்நடை வாகனம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய கால்நடை நோய்த் தடுப்பு திட்டத்தின்கீழ், 4 முதல் 8 மாதங்களான பெண் கன்றுகளுக்கு செலுத்துவதற்காக கருச்சிதைவு நோய்க்கான ‘புரூசெல்லா தடுப்பூசி’ 9,000 அலகுகள் வாங்கப்பட்டுள்ளன. புதுச்சேரியில் உள்ள ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரியில் உயிரி தொழில் நுட்பவியலில் ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தும் விதமாக பொது அறிவியல் ஆய்வக வசதி நிறுவ ₹ 2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**17.** சிறப்பு கால்நடை இனவிருத்தித் திட்டத்தின்கீழ், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்கள் அல்லாத விவசாயிகளுக்கு கன்று மற்றும் மாட்டுத் தீவனம் 75 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. ₹ 3.65 கோடி செலவில் 4,845 கறவைப் பசுக்களுக்கு 1,755 டன் மாட்டுத் தீவனமும் மற்றும் ₹ 38.50 இலட்சம் செலவில் 760 கிடேரிக் கன்றுகளுக்கு

183 டன் கன்றுத் தீவனமும் வழங்கப்பட்டுள்ளது. தேசிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 4,500 கால்நடைகள் மானியத்துடன் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. புறக்கடை கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் விதமாக 6 முதல் 8 வாரங்களான 4,500 இருவித பயன்பாடு கொண்ட கிரிராஜா இனக்கோழிகள் 50 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வறுமைக்கோட்டிற்குகீழ் இருக்கும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 50 விழுக்காடு மானியத்தில் 800 கறவை பசுக்கள் வாங்க ₹ 2 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 5,175 கால்நடை விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் 10,350 ஆறுவார வயதுடைய வான் கோழிகளை ஜோடிகளாக அளிக்க ₹ 30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## கலை மற்றும் பண்பாடு

**18. “கட்டிக் கரும்பான – இசைத்தமிழ்**
**காதில் கேட்டவுடன்**
**எட்டுவகைச் செல்வமும் – தாம் பெற்றார்**
**என்னை சுமந்து பெற்றார்”**

என பாவேந்தரின் வார்த்தைகளுக்கேற்ப நம் கலைச் செல்வங்களான பாரம்பரியக் கலைகள் மற்றும் கலைஞர்களை ஊக்கப்படுத்தி, முன்னேற்றம் அடையச் செய்து அவர்களுடைய திறமையை வெளிபடுத்தும் விதமாகவும் மற்றும் பொதுமக்களுக்கு ஆர்வம் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் புதுச்சேரியில் நிகழ்கால ஓவியக்கூடம் நடத்தப்பட்டது.

**19.** இந்த அரசு, 163 நலிவுற்ற கலைஞர்கள், 4 தமிழ் அறிஞர்கள் மற்றும் 70 கலைமாமணி / தமிழ்மாமணி / தெலுங்கு ரத்னா / மலையாள ரத்னா விருது பெற்றவர்களின் மாதாந்திர நிதி உதவியை ஏப்ரல் 2022 முதல் ₹ 500 உயர்த்தி வழங்கி வருகிறது. இது அவர்களின் வயதின் அடிப்படையில் 59 வயது வரை உள்ளவர்களுக்கு ₹ 2,150-ம், 60 வயது முதல் 79 வயது வரை உள்ளவர்களுக்கு ₹ 2,700-ம் மற்றும் 80 வயது மற்றும் அதைவிட அதிக வயது உள்ளவர்களுக்கு ₹ 3,750-ம் வழங்கப்பட்டுள்ளது.

**20.** சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா நிகழ்வின் கீழ், “வீடு தோறும் கொடி ஏற்றுவோம்” என்பதை கொண்டாடும் விதமாக 3,10,000 தேசியக்கொடிகள் வீடுதோறும் வழங்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 13 முதல் 15 வரை வீடு தோறும் கொடி ஏற்றுவோம் என்ற நிகழ்வு வெற்றிகரமாகக் கொண்டாடப்பட்டது. தஞ்சை தென்னகப் பண்பாட்டு மையத்தின் துணையோடும் மற்றும் நமது தேசம் முழுவதிலிருந்தும் வந்திருந்த 300 கலைஞர்கள் பங்கேற்புடன் பெரும் விழாவான “புதுச்சேரி கலைவிழா” புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

**21.** **“உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்
புகல்வேன்” உடைமை மக்களுக்கு பொது
புவியை நடத்து பொதுவில் நடத்து !**

என்ற பாவேந்தரின் வார்த்தைகளுக்கேற்ப அனைவருக்கும் உண்ண உணவு அளிக்கும் வகையில் புதுச்சேரி அரசு செயல்படுத்திவரும்

இலவச அரிசித் திட்டத்தின்கீழ், 2022-23ஆம் நிதி ஆண்டில் ₹ 200 கோடி செலவு செய்யப்பட்டு 3.53 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், மத்திய அரசால் மாதந்தோறும் ₹ 12.94 கோடி செலவு செய்யப்பட்டு 1.90 இலட்சம் "அந்தியோதயா அன்ன யோஜனா" (ஏழைகளுக்கான உணவுத் திட்டம்) மற்றும் முன்னுரிமை குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர். இதுதவிர, "பாரதப் பிரதமரின் கரிப் கல்யாண் அன்ன யோஜனா" (பிரதம மந்திரியின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் ஏழைகள் நலத்திட்டம்) திட்டத்தின்கீழ், உணவு தானியங்கள் இலவசமாக அனைத்து பிராந்தியங்களில் வசிக்கும் 1.90 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**22.** ஏனாம் பகுதியில் கடந்த ஜுலை 2022-ல் ஏற்பட்ட கடும் மழையாலும் மற்றும் கோதாவரி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தாலும் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் விதமாக "அந்தியோதயா அன்ன யோஜனா" (ஏழைகளுக்கான உணவுத் திட்டம்) மற்றும் முன்னுரிமை குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு ₹ 5,000-ம் மற்றும் முன்னுரிமை அல்லாத குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு ₹ 4,500-ம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மழை நிவாரணத் தொகையுடன் 25 கிலோ அரிசிக்கு இணையாக

₹ 1,000-ம் ஏனாம் பகுதியில் உள்ள "அந்தியோதயா அன்ன யோஜனா" (பிரதம மந்திரியின் உணவு பொருள் வழங்கல் மற்றும் ஏழைகள் நலத்திட்டம்) மற்றும் முன்னுரிமை குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த மழை நிவாரண நடவடிக்கைக்கு மொத்தம் ₹ 8.80 கோடி செலவு செய்யப்பட்டு 15,600 குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

**23.** பண்டிகை காலங்களில் உணவு தானியங்கள், எண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்தை தடுக்கும் வகையில் தீபாவளி சிறப்பு அங்காடி 10 நாட்களுக்கு நடத்தப்பட்டது. தீபாவளி பண்டிகையையொட்டி இலவச அரிசி மற்றும் சர்க்கரைக்கு ஈடாக ₹ 430-ம் பொங்கல் பண்டிகையையொட்டி பொங்கல் பரிசு தொகுப்புக்கு ஈடாக ₹ 500-ம் அனைத்து குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு முறையே ₹ 15.25 கோடியும் மற்றும் ₹ 17.66 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

**24.** உற்பத்தியாளராகவும் மற்றும் நுகர்வோராகவும் இருக்கும் மக்களின் உரிமையை பாதுகாப்பதே கூட்டுறவின் முதன்மை நோக்கமாகும். கூட்டுறவின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த அரசு கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதிகளில் இயங்கி வரும் பாண்டெக்ஸ், பாண்ஃபேப் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியக் கொடையாக ₹ 49.55 இலட்சம் வழங்கியுள்ளது.

**25.** வளர்ந்து வரும் குடியிருப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் புதுச்சேரி மாநில கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் மூலம் முத்துப்பிள்ளைபாளையத்தில் 63 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு, அவர்கள் பயன்பெறும் வகையில், 2022-23-ல் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 555 நபர்களின் அபராத வட்டி தொகையான ₹ 2.37 கோடியை தள்ளுபடி செய்தும் மற்றும் 7,549 விவசாயிகளின் டிராக்டர் வாடகை கட்டணமான ₹ 1.45 கோடியை திருப்பிச் செலுத்தியுள்ளது. ரிசர்வ் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ளபடி மூலதன இடர் சொத்து விகிதத்தை (CRAR) அதிகரிக்கும் வகையில் புதுச்சேரி கூட்டுறவு நகர வங்கிக்கு ₹ 5 கோடியும் மற்றும் புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கிக்கு ₹ 2 கோடியும் பங்கு மூலதன உதவியாக வழங்கப்பட்டுள்ளது. நலிவுற்ற கூட்டுறவு நிறுவனங்களை மீட்டெடுத்து புத்துயிர் அளிக்கும் வகையில் ₹ 30 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

## சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்

**26.** **“விசையுறு பந்தினைப் போல் – உள்ளம்**
**வேண்டிய படி செல்லும் உடல் கேட்டேன்”**

என்ற பாரதியாரின் கூற்றிற்கேற்ப புதுச்சேரி மக்களின் உடல் நலத்தில் அக்கறைக் கொண்ட இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தீவிர பல்ஸ் போலியோ தடுப்பு மருந்து

திட்டத்தின்கீழ், இவ்வாட்சிப்பரப்பின் தேசிய நோய்த் தடுப்பு நாள் கொண்டாடப்பட்டு 453 சாவடிகளில் 0-5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டுள்ளது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 86,801 குழந்தைகளில் மொத்தம் 89,456 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டுள்ளது. இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் நோய்த் தடுப்பு சிகிச்சைக்கான தேசியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு புற நோயாளிகள் பிரிவில் மாதத்திற்கு சராசரியாக 200 நோயாளிகளும் மற்றும் 10 படுக்கைகள் கொண்ட உள் நோயாளிகளுக்கான நோய்த் தடுப்பு சிகிச்சை வார்டு அமைக்கப்பட்டு மாதத்திற்குச் சராசரியாக 45 நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

**27.** இவ்வாட்சிப்பரப்பில் சிறந்த சமுதாய நலவழி மையத்திற்கான காயகல்ப் விருதைப் பெற்ற கரிக்கலாம்பாக்கம் சமுதாய நலவழி மையத்திற்கு ரொக்கப்பரிசு வழங்கப்பட்டு இந்த ரொக்கப் பரிசை பயன்படுத்தி பிராணவாயு உற்பத்தி ஆலை மற்றும் நலவழி மையத்திற்கு 230 கிலோவாட் திறன் கொண்ட ஜெனரேட்டர் நிறுவப்பட்டுள்ளது.

**28.** காரைக்கால், திருநள்ளார் சமுதாய நலவழி மையத்தின் கதிரியக்கவியல் துறையில் 32.5 KVA Three phase ஜெனரேட்டரும், 500 MA எக்ஸ்ரே இயந்திரமும் மற்றும் பிசியோதெரபி பிரிவில் ஷார்ட் வேவ் டயதெர்மி (Short Wave Diathermy) இயந்திரமும்

நிறுவப்பட்டுள்ளது. தேசிய காசநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின்கீழ், ஐந்து ஒளிரும் நுண்ணோக்கி கருவிகளும் மற்றும் ஐ.ஆர்.எல். (IRL) ஆய்வகத்திற்கு காசநோயை விரைவில் கண்டறியவும், அந்நோய்க்கு தரப்படும் மருந்துகளின் செயல்பாட்டு நிலையை கண்டறிய பயன்படும் மரபணு பரிசோதனை கருவி ஒன்றும் (CBNAAT Equipment) மத்திய காசநோய் பிரிவிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மேலும், மத்திய காசநோய் பிரிவின் தொற்றுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின்படியும் மற்றும் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களின்படியும் ஆய்வகத்தில் உள்ள மரபணு பரிசோதனைக்கு தேவைப்படும் வகையில் (Line Probe Assay) மூன்று அறைகள் பேனல்களுடனும் மற்றும் ஆய்வக வசதிகளுடனும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**29.** கோவிட் கட்டுப்பாட்டு திட்டத்தின்கீழ், முழு ஜீனோம் சீக்வென்சிங் (Genome Sequencing) இயந்திரம் ₹ 3.84 கோடி செலவில் வாங்கப்பட்டு இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது. மாகி அரசு பொது மருத்துவமனைக்கு ₹ 12.95 இலட்சம் செலவில் அல்ட்ரா சவுண்ட் (Ultra Sound) இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. நான்கு அதிநவீன உபகரணங்களுடன் கூடிய மருத்துவ அவசர ஊர்திகளும் மற்றும் 11 மருத்துவ அவசர ஊர்திகளும் வாங்கப்பட்டு இவ்வாட்சிப்பரப்பில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாட்சிப்பரப்பில் புதுச்சேரி மற்றும் மாகி பகுதிகளில் “இந்திரதனுஷ்” (அனைவருக்கும் நோய்

தடுப்புத்திறன் ஏற்படுத்தும் திட்டம்) திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. "ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா" (பிரதம மந்திரியின் மக்கள் சுகாதாரத் திட்டம்) திட்டத்தின்கீழ், வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ₹ 5 இலட்சம் வரை மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், இவ்வாட்சிப்பரப்பில் 1,71,305 குடும்பங்கள் பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு உரிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுதவிர, 28,711 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ₹ 16 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## இந்து அறநிலையத் துறை

**30.** இவ்வாட்சிப்பரப்பின் கட்டுப்பாட்டில் உள்ள 18 மற்றும் கட்டுப்பாட்டில் வராத 42 திருக்கோயில்களைச் சீரமைக்கும் பணிகளுக்கு உதவும் வகையில் மானியக்கொடையாக ₹ 2.98 கோடி வழங்கப்பட்டுள்ளது. நலிவுற்ற 196 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை செய்விக்க நிதி உதவியாக ₹ 39.20 இலட்சம் வழங்கப்பட்டுளள்ளது. புதுச்சேரி பகுதிகளில் உள்ள 10 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

## மின்விசை

**31.** ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தமான 390.64 MW புதுப்பிக்கத்தக்க எரி சக்தி மின்சாரத்தை வாங்கும் விதமாக இவ்வாட்சிப்பரப்பானது NTPC யிடமிருந்து 100 MW சூரிய

சக்தியையும் மற்றும் 90 MW காற்றாலை மின்சாரத்தையும் சூன் 2022 முதல் பெற்று வருகிறது. 2023-24ஆம் ஆண்டின் இறுதியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலின் மொத்த கொள்முதல் 600 MU-ஐ எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒடிசா மாநிலத்தில் உள்ள தலிபரா என்ற இடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 2400 MW மின் ஆலையிலிருந்து 100 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் மே 2022-ல் புதுச்சேரி அரசுக்கும் நெய்வேலி அனல் மின் நிலையத்திற்கும் இடையே கையெழுத்தாகியுள்ளது.

**32. வானமெங்கும் பரிதியின் சோதி;**
**மலைகள் மீதும் பரிதியின் சோதி;**
**தானை நீர்க்கடல் மீதிலும் ஆங்கே**
**தரையின் மீதும் தருக்களின் மீதும்**
**கான கத்திலும் பற்பல ஆற்றின்**
**கரைகளின் மீதும் பரிதியின் சோதி;**

அந்தப் பரிதியின் சோதியான.... அந்தச் சூரிய மின் சக்தியை மின் கட்டமைப்புடன் இணைக்கும் இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ், வீட்டு மின் நுகர்வோர்களின் மேற்கூரையிலிருந்து உற்பத்தியாகும் சூரிய மின் சக்தியை மின் கட்டமைப்புடன் இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2022-23ஆம் ஆண்டில், 2.50 MW திறனுள்ள சூரிய மின் உற்பத்தி பேனல்கள் மேல் தளங்களில் அமைக்கப்பட்டு மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. 34 புதிய பகிர்மான மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு அதன் திறன்

அதிகரிக்கப்பட்டுள்ளது. 60 கிலோ மீட்டர் உயர்மின் அழுத்தப் பாதைகளும் மற்றும் குறைந்த மின் அழுத்தப் பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக 8 உயர்மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மற்றும் 23 குறைந்த மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 8,572 வீடுகளுக்கும், 1,474 வர்த்தக நிறுவனங்களுக்கும், 36 வேளாண் பம்பு செட்டுகளுக்கும், 3,392 LED தெரு மின் விளக்குகளுக்கும் மற்றும் 1,492 தெரு மின் விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1,852 பழுதான மின் அளவிகள் (Meters) இயல் ஆற்றல் மின் அளவிகளாக (Static Meters) மாற்றப்பட்டுள்ளன. புதை மின் வடம் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ், 89 குறைந்த மின் அழுத்த மேல்நிலை மின் இணைப்புகள் புதைமின்வட அமைப்புகளாக மாற்றப்பட்டுள்ளன.

**33.** R - APDRP பகுதி - A (SCADA) திட்டத்தின்கீழ், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் SCADA - DMS மையத்தை வெற்றிகரமாக நிறுவியதால் மின் நிதி நிறுவனம் மத்திய அரசிடமிருந்து பெற்ற 100 விழுக்காடு கடன் தொகையான ₹ 9 கோடியையும், திரட்டப்பட்ட வட்டியான ₹ 1 கோடியையும் சேர்த்து மொத்தம் ₹ 10 கோடியை 100 விழுக்காடு மானியமாக மாற்றியுள்ளது. மின்சாரத்தை ₹ 767 கோடி முன்பணம் கொடுத்து வாங்கியதால் நமக்கு ஊக்கத் தொகையாக ₹ 11.50 கோடி கிடைத்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**34.** மீனவர்கள், மீன் வளர்ப்பு விவசாயிகள், மீன் விற்பனையாளர்கள், பிற மீன்பிடி உப தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் மீன்பிடி சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான மகத்தான ஆற்றல் மீன்வளத்தில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர். இந்த அரசு, இத்துறையில் அதிக கவனம் செலுத்துவதுடன் புதிய கொள்கைகள், நிலையான மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான நிதி ஆதரவையையும் வழங்கி வருகிறது.

**35.** இவ்வாட்சிப்பரப்பில் இருக்கும் 18,072 மீனவக் குடும்பங்களுக்கு உதவும் வகையில் 61 நாட்களுக்கான மீன்பிடி தடைக்கால நிவாரணமாக ₹ 10.29 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மழைக்கால நிவாரணமாக 18,298 மீனவக் குடும்பங்களுக்கு ₹ 4.57 கோடியும் மற்றும் 8,159 மீனவச் சமுதாயத்தை சேர்ந்த முதியோர்களுக்கு ஓய்வூதியமாக ₹ 27.59 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு மீன்பிடி தடைக்காலத்தில் மீன்பிடி படகுகளை பராமரிக்க ஆகும் செலவை வழங்கும் திட்டத்தின்கீழ், 386 பதிவு செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு ₹ 71.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வருடாந்திர காப்பீட்டுச் சந்தா தொகையில் 75 விழுக்காடு மானியமாக ₹ 15.15 இலட்சம் பதிவு செய்யப்பட்ட 227 மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**36.** மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமாக ₹ 65.71 இலட்சம் 776 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி விசைப்படகுகளுக்கான உடனடி டீசல் மானியமாக ₹ 3.64 கோடி வழங்கப்பட்டுள்ளது. நன்னீர் மீன் வளர்ப்பு ஊக்குவிப்பு திட்டத்தின்கீழ், ஏக்கர் ஒன்றுக்கு ₹ 7,500 வீதம் 287 ஏக்கர் பரப்பளவு கொண்ட மீன் வளர்ப்பு குளங்களுக்கு இடுபொருள் மானியமாக ₹ 21.57 இலட்சம் 216 மீனவ விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 75 விழுக்காடு மதிப்பெண் மற்றும் அதற்கு மேல் எடுத்த 393 சிறந்த மீனவச் சமுதாய மாணவர்களுக்கு ரொக்கப் பரிசாக ₹ 22.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக்கு மானியக் கொடையாக ₹ 8.47 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**37.** மீனவர்களை பாதுகாக்கும் வகையில், 34,200 மீனவர்களுக்கு உயிரிழப்பு, நிரந்தரமான உடல் ஊனம் மற்றும் பகுதி ஊனத்திற்கான காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. பாரதப் பிரதமரின் மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டத்தின்கீழ், கடலில் மீன்பிடித் தொழில் செய்யும் போது உயிரிழந்த 2 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டு தொகையாக தலா ₹ 5 இலட்சம் வீதம் ₹ 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி தடைக்காலம் / மழைக்காலங்களில் சமூக பொருளாதாரத்தில் பின்தங்கி பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலில்

ஈடுபடும் மீனவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார மற்றும் ஊட்டச் சத்து உதவி அளித்து மீன் வளத்தை பாதுகாக்கும் துணைத் திட்டத்தின்கீழ், ₹ 3,000 வீதம், 18,884 பயனாளிகளுக்கு மொத்தம் ₹ 5.67 கோடி வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியைச் சார்ந்த மீன் வியாபாரம் செய்யும் மீனவர்களுக்கு ₹ 3.15 இலட்சம் மதிப்பில் ஐஸ் பெட்டியுடன் கூடிய 8 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

## உயர் மற்றும் தொழில் நுட்பக்கல்வி

**38.** **"அறிவை வளர்த்திட வேண்டும் – மக்கள்**
**அத்தனை பேருக்கும் ஒன்றாய்**
**சிறியரை மேம்படச்செய்தல் – பின்பு**
**தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்"**

என்ற பாரதியார் பாடலைப்போல உயர் மற்றும் தொழில் நுட்பக் கல்வியானது இளைஞர்களை வளர்ச்சிப் பாதையில் பங்குபெறச் செய்யும் ஒரு முக்கிய காரணியாகும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். தொடர்ந்து வளர்ந்து வரும் மனித ஆற்றலுக்கான வேலை வாய்ப்பை உறுதி படுத்தும் விதமாக பாடத்திட்டத்தில் அடிப்படை சீர்திருத்தங்களுடன் ஒருங்கிணைந்த உயர்கல்வி கற்றலுக்கான பொதுத்துறை கல்வி நிறுவனங்களில் அதிக முதலீடுகள் நமக்கு தேவையாகிறது.

**39.** சென்டாக் (CENTAC) மூலமாக சேர்க்கை பெற்று தொழில் முறை உயர்கல்வியை பயிலும் மாணவர்களுக்கு இந்த அரசு தொடர்ந்து நிதி உதவியை வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில், பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், 415 மருத்துவக் கல்வி மாணவர்கள், 4,176 பொறியியல் கல்வி மாணவர்கள் மற்றும் 881 செவிலியர் கல்வி மாணவர்கள் அடங்கலாக மொத்தம் 5,472 மாணவர்கள் பயன் பெறும் வகையில் ₹ 20.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**40.** கிராமப்புற கல்லூரிகளை மேம்படுத்தி மற்றும் வசதிகளை அதிகரிக்கும் விதமாக கலிதீர்த்தால்குப்பத்தில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் கலைக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் ₹ 1.32 கோடிக்கும் மற்றும் வில்லியனூர் கஸ்தூரிபாய் மகளிர் கல்லூரியில் புதிய வளாகத்தில் கல்வி கட்டிடம் ₹ 1.20 கோடிக்கும் கட்டிடங்கள் கட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது. 2022-23ஆம் கல்வியாண்டு முதல் 240 மாணவர்கள் சேர்க்கையுடன் தற்போதுள்ள மகளிர் தொழில் நுட்பக் கல்லூரி, மகளிர் பொறியியல் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

## தொழில்கள்

**41.** **“தொழிலே வாழி நீ! தொழிலே வாழி நீ!**
**எழிலை உலகம் தழுவும் வண்ணம்**
**ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்**
**தொழிலே வாழி நீ! தொழிலே வாழி நீ”**

என்ற பாவேந்தர் பாடலைப் போல் புதிய தொழில் முனைவோருக்கு சரியான நேரத்தில் மற்றும் தொந்தரவு இல்லாத வழிகாட்டுதல் /

அனுமதியை உறுதி செய்து வலுவான மற்றும் குறிப்பிட்ட முயற்சிகளை எடுத்து ஒரு விருப்பமான தொழில் முதலீட்டு இடமாக புதுச்சேரியை இந்த அரசு உருவாக்கியுள்ளது. புதிய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் திட்டம் மற்றும் தொழில்களுக்கான நிதி உதவி திட்டத்தின்கீழ், மானியம் வழங்கப்பட்டு தொழில் முனைவோர் மற்றும் படித்த வேலையற்ற இளைஞர்கள் / கைவினைஞர்களுக்கு சுய தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கு தேவையான சேவைகளையும், ஆதரவையும் இந்த அரசு வழங்கி வருகிறது. உணவுப் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள 229 சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தேவையான சிறிய உபகரணங்கள் வாங்குவதற்காக ₹ 85.14 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 55 குறு நிறுவனங்களை மேம்படுத்த 35 விழுக்காடு மானியத்துடன் வங்கிக் கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**42.** கைவினைத் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 63 வேலையில்லா கிராமப்புற இளைஞர்களுக்கு கைவினைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், புதிய குழுவில் உள்ள 163 இளைஞர்களுக்கும் பயிற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. தென்னை நார் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 143 நபர்களுக்கு ஊக்கத் தொகையுடன் கூடிய கயிறு திரித்தல் மற்றும் கயிறு மிதியடி தயாரித்தல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. வேலையில்லா இளைஞர்கள் சுய தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், 100 தொழில் முனைவோர்களுக்கு வங்கிக்

கடன்கள் வழங்கப்பட்டு அதன்படி அவர்கள் சுய தொழிலைத் தொடங்கியுள்ளனர். பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், 22 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 60.55 இலட்சம் மானியத்துடன் ₹ 1.88 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. தொழில் வழிகாட்டு குழுமத்தின் மூலம் ₹ 67.23 கோடி முதலீட்டில் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தொடங்கப்பட்டு 840 தொழில் முனைவோர்கள் மூலம் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**43.** தொழிற்பயிற்சி திட்டத்தின்கீழ், உதவித்தொகையுடன் கூடிய தொழிற்பயிற்சி மற்றும் மேம்பட்ட / உயர்தொழில்நுட்ப பயிற்சி 123 படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதிய குழுவில் உள்ள 145 இளைஞர்களுக்கு பாடத்திட்டத்திற்கான கட்டணம் மற்றும் உதவித்தொகையுடன் கூடிய பயிற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. பாரதப் பிரதமரின் உணவுப் பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், 261 சுய உதவி குழுக்கள் பயன்பெறும் வகையில் ₹ 85.14 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2022-23ஆம் ஆண்டில் புதுச்சேரி பகுதியில் தொழில் முனைவோர் தொழில் தொடங்க ஊக்கமளிக்கவும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், 45 நிறுவனங்களுக்கான மூலதன முதலீடு, வட்டி, ஜெனரேட்டருக்கான மானியம் மற்றும் அறிவுசார் சொத்து ஆதரவு உதவிக்காக ₹ 10.17 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், காரைக்கால் பகுதியில் 3 நிறுவனங்களுக்கு மூலதன முதலீட்டு மானியமாக ₹ 60.48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் நலம்

**44.** **“வாழ்வுக் கொவ்வாத – இந்த**
**வையத்தை இந்நிலை எய்த புரிந்தோம்**
**ஆழ்கடல், காடு – மலை**
**அத்தனையிற் பல சத்தை எடுத்தோம்**
**ஈழை, அசுத்தம், குப்பை**
**இலை எனவே எங்கள் தலையில் சுமந்தோம்**
**சூழக்கிடந்தோம் – புவித்**
**தொழிலாளராம் எங்கள் நிலைமையைக் கேளீர்”**

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் கருத்திற்கேற்ப தொழிலாளர் நலம் காக்க தொழில்நுட்ப ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த தொழிலாளர்களின் சக்தி ஒரு நாட்டினுடைய மேம்பாட்டில் முதுகெலும்பாக திகழும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வர். எனவே, இந்த சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியில் பங்குபெறும் வகையில் வேலையில்லா இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி அளிப்பதற்கான உரிய முக்கியத்துவத்தை இந்த அரசு அளித்து வருகிறது.

**45.** புதுச்சேரி கட்டிட மற்றும் இதர கட்டுமான தொழிளாளர்கள் நல வாரியத்தின் 42,920 பயனாளிகளுக்கு மகப்பேறு நலன், ஈமச் சடங்கு உதவி, இறந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு உதவி, திருமண உதவி, உயர்கல்விக்கான நிதி உதவி, மருத்துவ உதவி, தீபாவளி பரிசுக் கூப்பன் போன்றவற்றிற்கான நிதி உதவியாக

₹ 16.79 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், 26,177 புதுச்சேரி அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவியாக ₹ 2.69 கோடி வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் நடைபெற்ற மிகப்பெரும் வேலைவாய்ப்பு முகாமில் முறையே 148 மற்றும் 225 நபர்களுக்கு 78 நிறுவனங்களில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**46.** வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் வகையில் வேலை வாய்ப்பகத்தில் சனவரி 2017 முதல் செப்டம்பர் 2018 வரையிலான காலக்கட்டத்தில் பதிவு காலாவதியான அனைத்து பதிவாளர்களுக்கும் ஒரு முறை தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்காக இணையவழி மூலம் 916 இளைஞர்கள் சேர்ந்துள்ளனர். இவ்வாட்சிப்பரப்பில் “பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா” (பிரதம மந்திரியின் திறன்மேம்பாட்டுத் திட்டம்) மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறனைப் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வு (SANKALP) போன்ற இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**உள்ளாட்சி**

**47.** “ஜல்ஜீவன்” (குடிநீர் இணைப்புத் திட்டம்) திட்டத்தின்கீழ், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கிடையில் தேவையான மற்றும் சுத்தமான குடிநீரை கிராமப்புற குடும்பங்களுக்கு 60 விழுக்காட்டிற்கு மேல் முறையாக

வழங்கிய சிறந்த பணியை அங்கீகரிக்கும் வகையில் இவ்வாட்சிப்பரப்பிற்கு முதல் பரிசை மாண்புமிகு இந்திய குடியரசுத்தலைவர் அவர்கள் வழங்கியுள்ளார். மேலும், இந்த பணியினை அங்கீகரிக்கும் விதமாக கிராமப்பகுதியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கியதால் புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டத்தை "ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர்" என்ற சான்றிதழ் பெற்ற மாவட்டமாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக நீராதாரத்தைப் பெருக்குவது, அதன் தரத்தை உயர்த்துவது மற்றும் பரிசோதிப்பது போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "அம்ருத் (AMRUT) 2.O" (அடல் மறுசீரமைப்பு மற்றும் நகர்புற மேம்பாட்டு இயக்கம்) திட்டத்தின்கீழ், புதுச்சேரி, காரைக்கால். மாகி மற்றும் ஏனாம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் குடிநீர் வழங்கல், நீர் நிலைகளை மீட்டெடுத்தல். பாதாள சாக்கடை வசதிகள் மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டத்திற்காக மத்திய அரசு ₹ 150 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## துறைமுகம்

**48.** 2022-23ஆம் ஆண்டில் காரைக்காலில் இயங்கி வரும் சுய பயன்பாட்டுக் கடல் முனைய வசதி 24,122 டன் திரவ சரக்குகளைக் கையாண்டதன் மூலம் ₹ 24.67 இலட்சமும் மற்றும் காரைக்கால் துறைமுகம் 9 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டதன் மூலம் ₹ 8.29 கோடியையும் வருவாயாக ஈட்டியுள்ளது. புதுச்சேரி துறைமுகத்தில் சரக்குகளை கையாளுவதற்குத் தேவையான

சுங்கத்துறையின் ஒப்புதல்கள் பெறப்பட்டு வணிக ரீதியிலான சரக்குகளை கையாள புதுச்சேரி துறைமுகம் தயார் நிலையில் உள்ளது. மத்திய அரசின் முழு நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் “சாகர்மாலா” (கடல் மாலை) திட்டத்தின்கீழ், புதுச்சேரி துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக முகத்துவாரத்தில் 6.83 இலட்சம் கன மீட்டர் மணல் தூர்வாரும் பணி ₹ 28 கோடி செலவில் முழுவதும் முடிக்கப்பட்டு, இத்துறைமுகத்தின் செயல்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளது. துறைமுக உள்வாய்க்காலில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக தடுப்புச் சுவர் மற்றும் பாலம் அமைக்கும் பணிக்காக மத்திய அரசு ₹ 4.68 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## பொதுப்பணிகள்

**49.** வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு நல்ல தரமான உள்கட்டமைப்பு வசதிகள் தேவை என்பதை உணர்ந்து இந்த அரசு, உள்கட்டமைப்பு மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

**50.** புதுச்சேரியில் உள்ள கட்டிடங்கள், சாலைகள், பாலங்கள் மற்றும் கிராமங்களை இணைக்கும் சாலைகளின் மறுசீரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளும் மற்றும் அனைத்து ‘U’ மற்றும் ‘L’ வடிவ வாய்க்கால்களை மேம்படுத்தி மறுகட்டமைப்பு பணிகளும் ₹ 16.46 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி நெட்டப்பாக்கம் கொம்யூன், மதகடிப்பட்டு சந்திப்பு முதல்

பண்டசோழநல்லூர் சந்திப்பு வரை உள்ள சாலையையும், மதகடிப்பட்டு மற்றும் பத்துக்கண்ணு பகுதியில் உள்ள தலா நான்கு சாலைகளையும் மேம்படுத்தும் பணிகள் ₹ 13.85 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**51.** புதுச்சேரி தவளக்குப்பத்தில் உள்ள ராஜீவ் காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்திலும், பாகூர் அரசு ஆரம்பப்பள்ளியிலும் மற்றும் ஏனாம் கனகலபேட்டா கிராமத்தில் உள்ள SKVPRN உயர்நிலைப் பள்ளிக்கூடத்திலும் தலா ஒன்று என மூன்று சிறு உள்விளையாட்டு அரங்கங்கள் ₹ 3.65 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. புதுச்சேரியில் 'பொலிவுரு நகரத் திட்டத்தின்கீழ்', அனைத்து வெள்ள நீர்வடிகால் வாய்க்கால்களை இணைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் ₹ 99.50 இலட்சம் செலவிலும் மற்றும் ப்ரீகாஸ்ட் ஆர்.சி.சி-யை பயன்படுத்தி கட்டப்பட்ட சிறு பாலங்களில், ஒன்று அண்ணா நகரிலும் மற்றொன்று எல்லைபிள்ளைச்சாவடி தேசிய நெடுஞ்சாலை சந்திப்பு மற்றும் குண்டு சாலையிலும் ₹ 3.73 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**வருவாய்**

**52.** 'ராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்பு திட்டம்' இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து வறுமைக் கோட்டிற்குகீழ் இருக்கும் குடும்பங்களுக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட குடும்ப உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைய நேரிட்டால் ஈமச்சடங்கு உதவியாக ₹ 30,000-ம், அகால மரணம்

அமைய நேரிட்டால் ₹ 75,000-ம், விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனத்திற்கு ₹ 75,000-ம் மற்றும் ஊனத்தின் தன்மை குறைவாக இருந்தால் ₹ 37,500-ம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இவ்வாட்சிப்பரப்பு முழுவதும் நிதி உதவியாக 915 பயனாளிகளுக்கு மொத்தம் ₹ 3 கோடி வழங்கப்பட்டுள்ளது. இயற்கை பேரிடரின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, இயற்கை பேரிடரால் இறந்த 3 நபர்களுக்கு ₹ 12 இலட்சமும் மற்றும் காயமடைந்த 19 நபர்களுக்கு ₹ 1.90 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. "சன்சத் ஆதர்ஷ் கிராம யோஜனா" (கிராம மேம்பாட்டுத் திட்டம்) திட்டத்தின்கீழ், மணப்பட்டு கிராமத்தில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஊரக மேம்பாடு**

**53.** **"அன்பென்று கொட்டுமுரசே – மக்கள்**
**அத்தனை பேரும் நிகராம்;**
**இன்பங்கள் யாவும் பெருகும் – இங்கு**
**யாவரும் ஒன்றென்று கண்டால்"**

என்ற பாரதியாரின் கூற்றிற்கு ஏற்ப வறுமையை போக்கி வேலைவாய்ப்பை உருவாக்கி, குறிப்பாக கிராமப்புற மக்களை முன்னேற்றம் அடையச் செய்ய இந்த அரசு பல்வேறுத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். மகாத்மா காந்தி தேசிய ஊரக

வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தின்கீழ், 5.56 இலட்சம் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு 36,887 கிராமப்புற குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். இதன் மூலம் ₹ 14.27 கோடி செலவில் 424 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தூய்மை இந்தியா திட்டம் கிராமின் கட்டம்-IIன் கீழ், 97 வீட்டு கழிப்பறைகளும் மற்றும் ஒரு சமூக சுகாதார வளாகமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், 47,611 குடும்பங்களில் 3,654 சுயஉதவிக் குழுக்களும், 265 குடியிருப்போர் நலக் கூட்டமைப்புகளும் மற்றும் 109 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. 1,777 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ₹ 2.67 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**54.** பிரதம மந்திரியின் நுண் உணவை பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தை தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்துடன் ஒருங்கிணைந்து புதுச்சேரி தொழில்துறை ஊக்குவிப்பு வளர்ச்சி மற்றும் முதலீட்டு கழகத்திலிருந்து (PIPDIC) விதை மூலதனக் கடன் தொகையான ₹ 1.36 கோடியை சுயஉதவிக் குழுக்களிடமிருந்து பெறப்பட்ட 368 விண்ணப்பதாரர்களுக்கு வழங்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் ₹ 74.94 இலட்சம் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் மூலம் 200 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. “தீன்தயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்யா யோஜனா” (ஊரக ஏழை இளைஞர்களை தற்சார்பு உடையவர்களாக ஆக்கும் திட்டம்) திட்டத்தின்கீழ், புதுச்சேரி, காரைக்கால், திருப்பூர், சென்னை மற்றும் பெங்களூர் போன்ற நகரங்களில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் 310 இளைஞர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் மற்றும் பல்வேறு

வர்த்தகங்களில் 291 இளைஞர்களுக்கு தற்போது பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. “மஹிலா கிசான் சசக்திகரன் பரியோஜனா” (பெண்கள் உழவர் அதிகாரத் திட்டம்) திட்டத்தின்கீழ், 30 கிராம பஞ்சாயத்துகளில் ₹ 30 இலட்சம் செலவில் தனிப்பயன் பணியமர்த்தல் மையம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தோட்டக்கலை நடவடிக்கைகளின் கீழ், 14,250 விவசாயிகள் பயனடையும் வகையில் ₹ 7.96 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரியின் கிராம சாலைத் திட்டத்தின்கீழ், 5 சாலைகள் 13.30 கி.மீ. நீளத்துக்கு முடிக்கப்பட்டுள்ளன.

## சமூக நலம்

**55.** மாற்றுத்திறனாளிகளுடைய தேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆதரவு அளிக்கும் வகையில் இந்த அரசு ₹ 2,000 முதல் ₹ 3,800 வரையிலான மாதாந்திர நிதி உதவியை 1,242 புதிய பயனாளிகளையும் சேர்த்து 20,423 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கி வருகிறது. இதற்காக, ₹ 57.46 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 20,423 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச அரிசிக்கு பதிலாக பண உதவியாக ₹ 8.18 கோடி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், இலவச துணிகளுக்கு பதிலாக நபருக்கு ₹ 500 என்ற விதத்தில் 16,301 மாற்றுத் திறனாளிகளுக்கு பண உதவியாக ₹ 82.08 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**56.** கர்ம வீரர் பெருந்தலைவர் காமராஜர் திட்டத்தின்கீழ், மாற்றுத்திறனாளிகளின் ஈமச் சடங்கினை செய்வதற்கான கருணைத் தொகையினை ₹ 10,000லிருந்து ₹ 15,000ஆக உயர்த்தி

253 மாற்றுத்திறனாளிகளின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கு கருணைத் தொகையாக ₹ 34.70 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் நடப்பதால் ஏற்படும் சிரமத்தைக் குறைக்கும் விதமாகவும் மற்றும் அதனை எளிதாக்கவும் எரிபொருள் மானியம் லிட்டருக்கு ₹ 61 லிருந்து ₹ 91 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ₹ 10.42 இலட்சம் செலவு செய்யப்பட்டு 160 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர். 200 கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வானொலிகளும் மற்றும் 100 செவித்திறனற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு காது கேட்கும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட 17,862 பிரத்தியேக அடையாள அட்டைகளுக்கு கூடுதலாக 1,576 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு இதுவரையில், 19,438 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. விளையாட்டு நாள் மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான தேசிய செயல் திட்டம் என்னும் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாற்றுத்திறனாளிகளுக்கு நடத்தப்பட்டன.

## சுற்றுலா

**57.** இவ்வாட்சிப்பரப்பானது கடற்கரைகள், கோயில்கள், கைவினைப் பொருட்கள், அனைத்து அம்சங்களும் பொருந்திய விசாலமான தெருக்கள், பாரம்பரிய கட்டிடங்கள் போன்றவற்றிற்கு பிரசித்திப் பெற்றது என்பது மிகவும் பரிட்சயமானது. சுற்றுலாப் பயணிகள்

இச்சுற்றுலா அம்சங்களால் ஈர்க்கப்பட்டு மீண்டும் மீண்டும் இவ்வாட்சிப்பரப்பிற்கு வருகை தருகின்றனர். கோவிட் பெருந்தொற்றுக்கு பிறகு சுற்றுலா பயணிகளின் வருகை படிப்படியாக 10 விழுக்காடு அதிகரித்துள்ளது. மத்திய நிதி உதவியுடன் பெரும் சுற்றுலாத் திட்டங்களான ஆயி மண்டபத்தை புதுப்பித்து பாரதி பூங்காவில் அலங்கார மின் விளக்குகளை பொருத்துதல் மற்றும் சின்ன வீராம்பட்டினத்தில் நீலக்கொடி தரச் சான்றளிக்கப்பட்ட ஈடன் கடற்கரை மேம்படுத்துதல் பணிகள் முடிக்கப்பட்ட சின்ன வீராம்பட்டினத்தில் உள்ள ஈடன் கடற்கரையில் நீலக்கொடி ஏற்றப்பட்டுள்ளது. காரைக்கால் அம்பகரத்தூர் ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலில், யாத்ரீகர் வசதிகளுக்கான மேம்பாட்டுப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

## நகர மற்றும் கிராமத் திட்டமிடல்

**58.** குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் வீட்டு வசதிகளை மேம்படுத்துவதில் இந்த அரசு அதிக கவனத்தை செலுத்தி வருகிறது. இதேபோல், அரியாங்குப்பம், மணவெளி பகுதியில் உள்ள அரவிந்தர் நகரில் வடிகாலுடன் கூடிய உட்புற சாலைகள் ₹ 56.75 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஏனாம் பகுதியில் உள்ள குரியம்பேட்டாவில் தற்போதுள்ள பக்க வடிகாலை மேம்படுத்தவும் மற்றும் பக்க வடிகாலுடன் கூடிய பாதுகாப்பு தடுப்புச் சுவர் கட்டுமானத்திற்கும் ₹ 44.25 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**59.** பாரதப் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், இந்த அரசு மாநில நிதி உதவியை ₹ 2 இலட்சமாக உயர்த்தி திருத்தப்பட்ட நிதி முறையின்படி 1,850 பயனாளிகளுக்கு நிதி உதவியை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு மொத்தம் ₹ 67.52 கோடி வழங்கப்பட்டு பயனாளிகள் தனக்குரிய இடத்தில் வீடு கட்டிக்கொள்ளும் வகையில் 1,403 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீடுகட்டும் திட்டத்தின்கீழ், புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் வீடுகளை முடிப்பதற்கான 2-வது மற்றும் 3-வது தவணை நிதி உதவியாக ₹ 1.07 கோடி 309 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## போக்குவரத்து

**60.** பாதுகாப்பு மற்றும் அமலாக்கத்திற்கான வாகனக் கண்காணிப்புத் தளத்தின் மேம்பாடு, தனிப்பயனாக்கம், வரிசைப்படுத்துதல் மற்றும் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி போக்குவரத்து துறையின் வளாகத்தில் வாகன இயக்கக் கண்காணிப்பு மையத்திற்கான கட்டுப்பாட்டு அறையை மத்திய நிதி உதவியுடன் ₹ 4.60 கோடி செலவில் கட்டப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. பெண்கள் நலனில் அக்கரையும், சமூக பொருளாதாரத்தில் மேம்பாடு அடையவும் மற்றும் பொதுப் போக்குவரத்தில் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யவும் மூன்று சக்கர மின்சார வாகன ஓட்டுநர் பயிற்சியினை பெண்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

61. **"கல்வி செல்வம் எய்தி**
**மனம் மகிழ்ந்து கூடியே**
**மனிதர் யாரும் ஒரு நிகர்**
**சமானமாக வாழ்வமே"**

என்ற பாரதியாரின் கூற்றை நினைவு கூர்ந்து கல்வி கடின உழைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதுடன், அதே சமயத்தில் நமக்குரிய வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிலும் பெரும் உதவி செய்கிறது. ஏழை மாணவர்களுக்கு உதவும் வகையிலும் மற்றும் மாணவர்கள் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்துவதை குறைக்கும் பொருட்டும் 94,532 மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பக் கல்வி நிலையில் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் மற்றும் சமத்துவத்தை கொண்டு வரவும் ஐந்து முதல் ஒன்பது வயது வரையிலான மாணவர்களின் படித்தல், எழுதுதல் மற்றும் எண்கணிதம் போன்ற ஆரம்பக் கல்வி அறிவை வளர்க்க ₹ 42.15 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பினுடைய ஆசிரியர்களின் பயிற்சிக்காகவும் மற்றும் மனநலம் பேணுவதற்காகவும் முதலீடுகள் இல்லா கல்வி மாற்றுத் திட்டத்தை தொடங்கும் விதமாக ஸ்ரீ அரபிந்தோ சொசைட்டியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்து மாணவியரை உத்வேகப்படுத்தி, ஊக்கப்படுத்தவும் மற்றும் தற்காப்புப் பயிற்சி அளிக்கவும் ₹ 7.95 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மத்திய மற்றும்

மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டத்தின்கீழ், முன் மழலையர் முதல் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 83,385 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மடிகணினிகளை அளிப்பதற்காக ₹ 40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**நில அளவை**

**62.** ஆளில்லா விமான ஆய்வு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி "கிராமப்புறங்களை ஆய்வு செய்து மற்றும் கிராமப்புற பகுதிகளை மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் இணைத்தல்" திட்டத்தின் முக்கிய நோக்கமானது, இலவச மனைப்பட்டா வழங்கியவர்களுக்கு சொத்து அடையாள அட்டையை வழங்குவதும், வங்கிகளில் மிக எளிமையாகக் கடன் பெறுவதையும் மற்றும் இதர நிதி சேவைகளைப் பெறுவதை ஏதுவாக்குவதுமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறேன். அதன் அடிப்படையில், 69 வருவாய் கிராமங்களைச் சேர்ந்த தகுதிவாய்ந்த 1,898 பயனாளிகளுக்கு சொத்து அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. நிலமற்ற ஏழை மக்களுக்கு உதவும் நோக்கத்துடன் 65 குடும்பங்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம்

**63.** **“வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் – அதில்**
**மானுடர் வேற்றுமை யில்லை**
**எண்ணங்கள் செய்கைகளெல்லாம் – இங்கு**
**யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்**
**நிகரென்று கொட்டு முரசே – இந்த**
**நீணிலம் வாழ்பவ ரெல்லாம்”**

என்ற பாரதியார் கூற்றுக்கிணங்க அட்டவணையின மக்கள் மற்றும் பழங்குடியினரை ஒருங்கிணைந்த சமூக பொருளாதாரத்தில் மேம்பாடு அடையவும் மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக அவர்களுடைய நிலையில் முன்னேற்றம் அடைந்து சமுதாயத்தில் முக்கிய பங்காற்றச் செய்வதிலும் இந்த அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது என்பது நன்கு அறிந்ததே.

**64.** ஏழை அட்டவணை மற்றும் பழங்குடியின குடும்பங்களில் உள்ள 266 பெண்களுக்கு திருமண நிதி உதவியாக குடும்பம் ஒன்றுக்கு ₹ 75,000 வழங்கப்பட்டதன் மூலம் ₹ 2 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த திருமண நிதி உதவியானது ₹ 75,000லிருந்து ₹ 1 இலட்சமாக உயர்த்தப்பட்டு நவம்பர் 2022 முதல் வழங்கப்பட்டு வருகிறது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் அட்டவணை மற்றும் பழங்குடியின தாய்மார்களுக்கு நிதி உதவியாக ₹ 77.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அட்டவணை மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த 1,900 பயனாளிகள் பயனடையும் வகையில் தொடர் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவியாக ₹ 4.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**65.** அட்டவணையின மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச துணிகளுக்கு மாற்றாக தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு 1,25,732 பயனாளிகளுக்கு ₹ 6.29 கோடி வழங்கப்பட்டுள்ளது. 122 கலப்புத் திருமண தம்பதியர்கள் பயனடையும் வகையில் ₹ 3.05 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஏழை அட்டவணையின மற்றும் பழங்குடியின குடும்பத்தில் இறந்தவர்களின் இறுதிச் சடங்குகளை மேற்கொள்ள 1,393 குடும்பங்களுக்கு நிதி உதவியாக ₹ 2.09 கோடி வழங்கப்பட்டுள்ளது. சனவரி 2023 முதல் ஈமச்சடங்கு செய்வதற்கான நிதி உதவி ₹ 15,000லிருந்து ₹ 25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அட்டவணையின மற்றும் பழங்குடியின வன்கொடுமைச் சட்டம், 1989-ன் கீழ் பாதிக்கப்பட்ட 15 நபர்களுக்கு நிவாரண நிதியாக ₹ 14.55 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அட்டவணையின மற்றும் பழங்குடியின மக்கள் நன்கு கட்டி முடிக்கப்பட்ட சொந்த வீடுகளில் வாழும் பொருட்டு, பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 373 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்காக ₹ 3.98 கோடியும் மற்றும் ராஜீவ்காந்தி கல்வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 95 பயனாளிகளுக்கு ₹ 1.19 கோடியும் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

**66.** பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்கள் கல்வி, சமூக மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்து மேம்பாட்டடையச் செய்ய இந்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பிற்படுத்தப்பட்ட 3,065 மற்றும் 820 மாணவர்களுக்கு முறையே மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட உதவித் தொகையும் மற்றும் மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட படிப்புக்கான உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. ஏழைக் கைவினைஞர்களை சமூக பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையச் செய்யும் வகையில் நிலுவையில் உள்ள ₹ 85 இலட்சம் மதிப்புமிக்க 177 சலவைப்பெட்டிகள், 65 முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு நாற்காலிகள் மற்றும் உபகரணங்கள், 65 நபர்களுக்கு தவில், 65 நபர்களுக்கு நாதஸ்வரம் மற்றும் நடப்பாண்டில் ₹ 20.82 இலட்சம் மதிப்புள்ள 200 சலவைப் பெட்டிகளும் மற்றும் 34 முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு நாற்காலிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**67.** மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட படிப்புக்கான உதவித் தொகை திட்டத்தின்கீழ், 4,317 சிறுபான்மையின மாணவர்களும் மற்றும் மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட படிப்புக்கான உதவித் தொகை திட்டத்தின்கீழ், 619 சிறுபான்மையின மாணவர்களும் பயனடைந்துள்ளனர். இதேபோல், தொழில் சார்ந்த மற்றும் தொழில் நுட்பக் கல்வி அடிப்படையிலான உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், ₹ 12.34 இலட்சம் நிதி உதவி பெற்று 48 சிறுபான்மையின மாணவர்கள் பயனடைந்துள்ளனர். கர்ம வீரர் காமராஜர் இலவச மிதிவண்டி மற்றும் மழை அங்கி வழங்கும் திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகள் அளிப்பதற்காக ₹ 4.88 கோடியும் மற்றும் மழை அங்கிகள் அளிப்பதற்காக ₹ 60 இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**68.** பாவேந்தரின் கூற்றான

> **“வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்**
> **பெண்மையினால் உண்டென்று பேச வந்த**
> **பெண்ணழகே....”**

என்று மனிதர் நலனுக்கு உயர்வு தரும் பெண்மைக்கு உயர்வு தர..... கல்வி, சம உரிமை மற்றும் சமூக நீதி ஆகியவற்றோடு பெண்களை ஒன்றிணைத்து, பொருளாதாரத்தில் மேம்பாட்டடையச் செய்ய பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர். அதன் அடிப்படையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஒட்டுமொத்த மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு முன் முயற்சியாக, வறுமைக்கோட்டிற்குகீழ், வாழும் குடும்பத் தலைவிகளுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்கும் திட்டம் இவ்வாட்சிப்பரப்பில் சனவரி 2023 முதல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, மாதாந்திர நிதி உதவியாக ₹ 1,000 வீதம் முதல் கட்டமாக 13,339 பயனாளிகளுக்கு ₹ 1.33 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**69.** குழந்தைகள் பராமரிப்பு சேவை திட்டத்தின்கீழ், பாதுகாப்பு மற்றும் கவனிப்பு தேவைப்படும் குழந்தைகளின் நலனுக்காக, 29 குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் இருக்கும் 331 குழந்தைகள் பயன்பெறும் வகையில் கொடையாக

₹ 3.68 கோடி வழங்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றால் பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்கு நம்பிக்கையை உறுதிபடுத்தும் வகையில் "பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா" (பிரதம மந்திரியின் மக்கள் சுகாதாரத் திட்டம்) திட்டத்தின்கீழ், கொரோனா பெருந்தொற்றால் இரண்டு பெற்றோர்களையும் இழந்த 12 குழந்தைகளுக்கு தலா ₹ 5 இலட்சத்திற்கு மருத்துவக் காப்பீடு செய்யப்பட்டு சுகாதார அட்டையும் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைகள் மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட மற்றும் பிற்பட்ட திட்டங்களின்கீழ், பதியப்பட்டு, கருணை தொகையாக ₹ 50,000-ம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்பு ஆதரவு திட்டத்தின்கீழ், 12 குழந்தைகளுக்கு நிதி உதவியாக ₹ 11.42 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**70.** கொரோனா தொற்றுக்கு பிந்தைய பராமரிப்பு உதவித் திட்டத்தின்கீழ், 18 வயது முதல் 21 வயது வரை உள்ள 28 பயனாளிகளுக்கு பராமரிப்பிற்காக ₹ 7.84 இலட்சம் குழந்தைகள் பாதுகாப்பு இல்லத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டத்தின்கீழ், ஊட்டச்சத்துமிக்க இணை உணவு வழங்குவதற்காக ₹ 2.87 கோடி செலவு செய்யப்பட்டு 28,912 குழந்தைகளும் மற்றும் 9,560 தாய்மார்களும் பயனடைந்துள்ளனர். பிரதம மந்திரியின் மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், 5,200 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களது முதல் குழந்தைப் பேற்றுக்காக மொத்தம் ₹ 2.75 கோடி வழங்கபட்டுள்ளது.

**71.** முதியோர் ஓய்வூதியத் திட்டம் இந்த அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதியோர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 1,64,847 பயனாளிகள் பயன்பெறும் வகையில் நிதி உதவியாக ₹ 455.35 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2,000 இறந்த ஓய்வூதியதாரர்களின் ஈமச் சடங்கினைச் செய்வதற்கான நிதி உதவியாக மொத்தம் ₹ 2.50 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஈமச் சடங்கினைச் செய்வதற்கான நிதி உதவி மே 2022 முதல் ₹ 10,000 லிருந்து ₹ 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**72.** பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இரண்டு குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட 1,21,365 குடும்ப உணவுப் பங்கீட்டு சிவப்பு அட்டைதாரர்களுக்கும் மற்றும் ஒரே உறுப்பினர் கொண்ட 13,644 குடும்ப உணவுப் பங்கீட்டு சிவப்பு அட்டைதாரர்களுக்கும் மொத்தம் ₹ 12.82 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஏழைப் பெண்களின் திருமணத்திற்காகவும் மற்றும் விதவைகளின் மகள் திருமணத்திற்காகவும் முறையே 1,466 மற்றும் 134 பயனாளிகளுக்கு நிதி உதவியாக மொத்தம் ₹ 4 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**73.** இத்துடன் நான் என்னுடைய உரையை நிறைவு செய்து மேலும், இவ்வாட்சிப்பரப்பானது அனைத்து விதங்களிலும் நன்கு முன்னேறி வருகிறது என்பதை கூற விரும்புகிறேன்.

இந்த ஆட்சிப்பரப்பை சமூக பொருளாதாரத்தில் முன்னேற்றமடையச் செய்து குறிப்பாக வறுமையை போக்குவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது மற்றும் அனைத்து பிராந்தியங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகளை துல்லியமாக விகிதாசார அடிப்படையில் பகிர்ந்தளித்து பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை போக்கியுள்ளது.

**74.** இவ்வாட்சிப்பரப்பில் செயல்படுத்துவதற்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான ஆதரவையும் மற்றும் மதிப்புமிக்க பரிந்துரைகளையும் உறுப்பினர்கள் நல்குவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன், இவ்வரசால் மக்களுக்காக தொடங்கும் பணிகள் அனைத்தும் வெற்றிபெற வாழ்த்தி

**"தொடங்குக பணியை ! அடங்கல் உலகும்**
**இடும் நமது ஆணை ஏற்று நடக்கவும்**
**தடங்கல் சுவர் சாய்ந்து தூளாகவும்**
**தொடங்குக – செந்தமிழ் சொல்லால், செயலால்**
**தடம் பெரும் தோளால் தொடங்குக பணியை"**

என்ற ஊக்கமிகு பாவேந்தரின் வரிகளுக்கேற்ப தங்களின் கலந்தாய்வு விவாதங்களும் தொடங்கி, தொடர்ந்து வெற்றிபெற நான் தங்களை வாழ்த்துகிறேன்.

*ஜெய்ஹிந்த்....*

*நன்றி !*

*வாழ்க பாரதம்!!*

*வளர்க புதுச்சேரி !!!*



மகாத்மா காந்தி சதுக்கம், கடற்கரைச் சாலை, புதுச்சேரி

வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 605 009.